**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.34/2020**
**Deposition of witness for prosecution -PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முருகேசன் |
| Father Name | : | திரு. ஆறுமுகம் |
| Village | : | பூத்தோண்டி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலி வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of December 2021.

முதல் விசாரணை :-

நான் பூத்தோண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 , அ.சா.2 ஐ தெரியும். வாகன விபத்தில் இறந்து போன சதீஷ்குமார் என் ஊரை சேர்ந்தவர் ஆவார். 2019 ஆம் வருடம் எங்கள் ஊரிலிருந்து தேவிபட்டிணம் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு பின்னால் சாட்சி முனீஸ்வரன் என்பவர் பைக்கில் வந்து கொண்டிருந்தார். அப்போது காலை 10 மணி இருக்கும். மாதவனூர் To பட்டோடி சாலை அருகே Innova கார் பைக்கில் சென்ற சதீஷ்குமார் மீது மோதி நின்றது. அந்த காரை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரி தான். அந்த கார் தேவிபட்டிணத்திலிருந்து பொட்டகவயல் சென்று கொண்டிருந்தது. சதீஷ்குமார் தேவிபட்டிணம் செல்வதற்காக சென்று கொண்டிருந்தார். அப்போது 3 பேருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. சதீஷ்குமாருக்கு தலை மற்றும் காலில் காயம் ஏற்பட்டிருந்தது. காளியம்மாள் என்பவருக்கு வலது பக்க காதில் காயம் ஏற்பட்டிருந்தது. நாகஜோதி என்பவருக்கு தலையில் அடிபட்டிருந்தது. பின்பு நானும் முனீஸ்வரனும் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனையில் சதீஷ்குமார் இறந்து விட்டதாக கூறினார்கள். அது சம்பந்தமாக போலீசார் அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.34/2020**
**Deposition of witness for prosecution -PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.காளியம்மாள் |
| Husband Name | : | திரு. கதிரேசன் |
| Village | : | பூத்தோண்டி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கூலி வேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23rd day of December 2021.

முதல் விசாரணை :-

நான் பூத்தோண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்து போன சதீஷ்குமார் என் அண்ணன் முறை ஆவார். 13.06.2019 ஆம் தேதி பூத்தோண்டியிலிருந்து இராமநாதபுரம் செல்வதற்காக தேவிபட்டிணத்தில் இறக்கி விட சொல்லி என் அண்ணன் சதீஷ்குமார் Hero Honda Bike ல் சென்றோம். அப்போது காலை 9.30 மணி இருக்கும். அப்போது அ.சா.1 பைக்கில் சென்று கொண்டிருந்தபோது அ.சா.1 ன் உறவினர் காளியம்மாள் என்னையும் தேவிபட்டிணத்தில் இறக்கி விட சொன்னேன். நாங்கள் 3 பேரும் பைக்கில் சென்றோம். பைக்கை சதீஷ்குமார் ஓட்டினார். மாதவனூர் To பட்டோடி செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு தேவிபட்டிணத்தில் இருந்து பொட்டகவயல் செல்வதற்காக Innova கார் வேகமாக வந்தது. எங்கள் பைக் மீது கார் மோதியது. நானும் அ.சா.1 ம் மயக்கம் அடைந்து விட்டோம். அந்த காரை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது. எங்களோடு தேவிப்பட்டிணம் செல்வதற்காக பைக்கில் வந்தவர்கள் முருகேசன், முனீஸ்வரன் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி எங்களை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் மயக்க நிலையில் இருந்ததால் சதீஷ்குமாருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. மருத்துவமனை சென்ற பின்பு சதீஷ்குமார் இறந்துவிட்டதாக கூறினார்கள். அதன் பின்பு நான் மருத்துவமனையில் இருக்கும் போது போலீசார் அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். நான் மருத்துவமனையில் இருந்து மேற்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஒரு வாரமாக சிகிச்சையில் இருந்தேன். இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C.34/2020**
**Deposition of witness for prosecution -PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.நாகஜோதி |
| Husband Name | : | திரு. தவமணி |
| Village | : | பூத்தோண்டி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | இல்லதரசி |
| Religion | : | இந்து |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 23th day of December 2021.

முதல் விசாரணை :-

நான் பூத்தோண்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். வாகன விபத்தில் இறந்து போன சதீஷ்குமார் என் மருமகன் ஆவார். 13.06.2019 ஆம் தேதி பூத்தோண்டியிலிருந்து இராமநாதபுரம் செல்வதற்காக தேவிபட்டிணத்தில் இறக்கி விட சொல்லி என் மருமகன் சதீஷ்குமார் Hero Honda Bike ல் சென்றோம். அப்போது காலை 9.30 மணி இருக்கும். அப்போது நான் பைக்கில் சென்று கொண்டிருந்தபோது என் உறவினர் காளியம்மாள் என்னையும் தேவிபட்டிணத்தில் இறக்கி விட சொன்னார். நாங்கள் 3 பேரும் பைக்கில் சென்றோம். பைக்கை சதீஷ்குமார் ஓட்டினார். மாதவனூர் To பட்டோடி செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு தேவிபட்டிணத்தில் இருந்து பொட்டகவயல் செல்வதற்காக Innova கார் வேகமாக வந்தது. எங்கள் பைக் மீது கார் மோதியது. நானும் காளியம்மாளும் மயக்கம் அடைந்து விட்டோம். அந்த காரை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது. எங்களோடு தேவிப்பட்டிணம் செல்வதற்காக பைக்கில் வந்தவர்கள் முருகேசன், முனீஸ்வரன் 108 ஆம்புலன்சுக்கு தகவல் சொல்லி எங்களை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் மயக்க நிலையில் இருந்ததால் சதீஷ்குமாருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. மருத்துவமனை சென்ற பின்பு சதீஷ்குமார் இறந்துவிட்டதாக கூறினார்கள். Innova காரை ஓட்டி வந்தவர் முகமது கனி என்று சொன்னார்கள். அதன் பின்பு நான் மருத்துவமனையில் இருக்கும் போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான். அது அ.த.சா. 1 ஆகும். அந்த புகார் வாக்குமூலத்தில் ராமு என்பவர் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டார். நான் மருத்துவமனையில் இருந்து மறுநாள் மணமேல் குடியிலுள்ள விஜய் மருத்துவமனையில் சேர்ந்தேன் . 17 ஆம் தேதி வரை சிகிச்சையில் இருந்தேன். என்னுடன் காயம் அடைந்த காளியம்மாள் என்பவரை மேற்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார்

விசாரணை செய்தார்கள். நடந்தவற்றை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.